பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

24 07 2025 6 45

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இங்கிலாந்து சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று அந்நாட்டுப் பிரதமர் திரு. **Keir Starmer** உடன் இருதரப்பு பேச்சு நடத்த உள்ளார்.

2. இந்தியாவில் பெட்ரோலுடன் 20 சதவீதம் அளவுக்கு எத்தனால் கலப்பு செய்யப்பட்டுள்ளதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

3. அதிநவீன தொழில்நுட்பங்கள் அனைத்தும் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு சென்றடையும் வகையில் மாநில அரசு செயல்பட்டு வருவதாக அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

4. சித்தா, ஆயுர்வேதா, யுனானி மற்றும் ஹோமியோபதி மருத்துவப் பட்டப் படிப்புகளுக்கு இன்று முதல் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

5. இங்கிலாந்து அணிக்கு எதிரான 4வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாளான நேற்று ஆட்டநேர இறுதியில் இந்தியா தமது முதல் இன்னிங்சில் 4 விக்கெட் இழப்புக்கு 264 ரன் எடுத்தது.

<<<<>>>>

இங்கிலாந்து சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று அந்நாட்டுப் பிரதமர் திரு. **Keir Starmer** உடன் இருதரப்பு பேச்சு நடத்த உள்ளார்.

பாதுகாப்பு, வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பம், புதுமைக் கண்டுபிடிப்புகள், பருவநிலை, சுகாதாரம், கல்வி உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து அவர்கள் பேச்சு நடத்த உள்ளனர்.

பிரதமர் பயணத்தின் முக்கிய அம்சமாக இரு நாடுகளுக்கிடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது.

இருநாட்டுப் பிரதமர்கள் முன்னிலையில் நடைபெற உள்ள தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயலும், இங்கிலாந்து வர்த்தக அமைச்சர் திரு. **Jonathan Reynolds**-ம் கையெழுத்திட உள்ளனர். இன்று மாலை பிரதமர் திரு. மோடி, மூன்றாம் சார்லசை சந்தித்துப் பேசவுள்ளார்.

முன்னதாக இரண்டு நாள் பயணமாக இங்கிலாந்து சென்றுள்ள திரு. நரேந்திர மோடி நேற்றிரவு லண்டன் சென்றடைந்தார்.

அங்கு அவரை இந்திய வம்சாவளியினர் உற்சாகமுடன் வரவேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

இந்தியாவில் பெட்ரோலுடன் 20 சதவீதம் அளவுக்கு எத்தனால் கலப்பு செய்யப்பட்டுள்ளதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

5 ஆண்டுகளுக்கு முன்னதாகவே இதற்கான இலக்கு எட்டப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இதன் மூலம் அன்னிய செலாவணியில் ஒரு லட்சத்து 36 ஆயிரம் கோடி ரூபாய் சேமிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும் விவசாயிகளுக்கு ஒரு லட்சத்து 18 ஆயிரம் கோடி ரூபாய் வழங்கப்பட்டள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

பெட்ரோலுடன் எத்தனால் கலப்பு மூலம் 698 லட்சம் டன் அளவிற்கு கார்பன்-டை-ஆக்சைடு வெளியீடு குறைக்கப்பட்டுள்ளதாகவும் திரு. ஹர்தீப் சிங் புரி குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

நடப்பு கல்வியாண்டில் சித்தா, ஆயுர்வேதா, யுனானி மற்றும் ஹோமியோபதி மருத்துவப் பட்டப் படிப்புகளுக்கு இன்று முதல் விண்ணப்பிக்கலாம் என்று இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆணையரகம் அறிவித்துள்ளது.

இணையதளம் வாயிலாக மட்டுமே விண்ணப்பிக்க முடியும் என்றும், இதற்கான தகவல்களை **www.tnhealth.tn.gov.in** மற்றும் **www.tnayushselection.org** என்ற வலைதளங்களின் மூலம் அறிந்துகொள்ளலாம் என்று தெரிவித்துள்ளது.

விண்ணப்பங்களை சமர்ப்பிக்க அடுத்த மாதம் 8ஆம் தேதி கடைசி நாளாகும்.

<<<<>>>>

மத்திய காலணி பயிற்சி நிறுவனத்தில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் பயிற்சி தொடங்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனத்தின் இயக்குநர் திரு. முரளி தெரிவித்துள்ளார்.

சென்னை பத்திரிகை தகவல் அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர், 10, 12ஆம் வகுப்பு, பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு முடித்தவர்களுக்கு இதற்கான பயிற்சி வகுப்புகள் தனியாக நடைபெறுவதாக கூறினார்.

திண்டிவனம், உளுந்தூர்பேட்டை, ஜெயங்கொண்டம், புதுக்கோட்டை, கரூர், ராணிப்பேட்டை உள்ளிட்ட இடங்களில் தோல் அல்லாத காலணி தொழிற்சாலைகள் தொடங்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச காலணி உற்பத்தி நிறுவனங்கள் தென்னிந்தியாவில் தங்கள் உற்பத்தி தொழிற்சாலைகளை நிறுவுவதால் தமிழகத்தில் மட்டும் அடுத்த 2 ஆண்டுகளில் காலணி துறையில் சுமார் ஒரு லட்சத்து 35 ஆயிரம் திறமையான தொழிலாளர்கள் தேவைப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக திரு. முரளி கூறினார்.

<<<<>>>>

ஆடித்திருவாதிரையை ஒட்டி அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரத்தில் சைவ சித்தாந்தமும், சோழர் கோவில் கலைகளும் குறித்த கண்காட்சி பொதுமக்கள் பார்வைக்காக நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இக்கண்காட்சியை வரும் 27ஆம் தேதி பிரதமர் திரு. நரேந்திர மோடி பார்வையிட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

சென்னை சென்ட்ரலில் இருந்து திருவனந்தபுரத்திற்கு இயக்கப்படும் அதிவேக விரைவு ரயில் நாளை வழக்கம்போல் இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கோட்டயம் - திருவனந்தபுரம் இடையே இந்த ரயில் சேவை ரத்து செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இதேபோல் நாளை மறுநாள் மதுரை — குருவாயூர் எக்ஸ்பிரஸ் ரயில் வழக்கம்போல் இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இந்த ரயில் சேவை கொல்லம் - குருவாயூர் இடையே ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது என்று தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

அதிநவீன தொழில்நுட்பங்கள் அனைத்தும் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு சென்றடையும் வகையில் மாநில அரசு செயல்பட்டு வருவதாக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து திருவள்ளூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் 33 பள்ளிகளில் ஸ்டெம் கண்டுபிடிப்பு மற்றும் கற்றல் மையம் தொடங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

மாணவர்களின் கற்றலை மேம்படுத்தும் வகையில் இந்த மையம் தொடங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் 5 பள்ளிகளில் ஒரு கோடியே 38 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இந்தக் கற்றல் மையம் அமைக்கப்பட்டுள்ளதாக திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறிப்பிட்டார்.

<<<<>>>>

நீலகிரி, கோவை, தேனி, தென்காசி மாவட்டங்களுக்கு உட்பட் சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளரிடம் பேசிய அவர், சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், ஒருசில பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் கூறினார்.

கடலோர பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் அடுத்த நான்கு தினங்களுக்கு கடலுக்குச் செல்ல வேண்டாம் என்றும் திரு. செந்தாமரைக்கண்ணன் அறிவுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ரஷ்யா – யுக்ரைன் இடையே மூன்றாது சுற்று அமைதிப் பேச்சுகள் துருக்கி தலைநகர் இஸ்தான்புல்லில் நேற்று நடைபெற்றது.

------------

பங்களாதேஷ் விமான விபத்தில் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக இந்தியா மருத்துவக் குழு நேற்று மாலை டாக்கா சென்றடைந்தது.

------------

நாட்டில் மின்னணு பொருட்களின் உற்பத்தி கடந்த 10 ஆண்டுகளில் 6 மடங்கு அளவுக்கு வளர்ச்சி பெற்றுள்ளதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா தெரிவித்துள்ளார்.

------------

நாடு முழுவதும் பழங்குடியினர் சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்காக 479 ஏகலைவா மாதிரி உண்டு உறைவிடப் பள்ளிகள் செயல்பட்டு வருவதாக பழங்குடியினர் நலத்துறை இணையமைச்சர் திரு. துர்காதாஸ் உய்கே தெரிவித்துள்ளார்.

------------

தருமபுரி அரசு கலைக்கல்லூரியில் நாளை மறுநாள் தனியார் துறை சார்பில் வேலைவாய்ப்பு முகாம் நடைபெற உள்ளது.

------------

கள்ளக்குறிச்சி அருகே பல்லகசேரி கிராமத்தில் மீன்பிடி திருவிழா நேற்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

------------

ஈரோடு மாவட்டம் கொங்கர்பாளையம் கிராமத்தில் உள்ள குண்டேரிபள்ளம் நீர்த்தேக்கத்தில் இருந்து பாசன நிலங்களுக்கு இன்று முதல் 7 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

------------

கரூர் மாவட்டம் தரகம்பட்டியில் பிறப்பு சான்றிதழில் பெயர் பிழை திருத்தம் செய்வதற்காக 5 ஆயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கிய வட்டாட்சியரை லஞ்ச ஒழிப்பு துறையினர் கைது செய்தனர்.

------------

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் அங்காளம்மன் ஆடி அமாவாசை திருவிழா இன்று நடைபெறுகிறது.

------------

தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய தலைமை அலுவலகம் சென்னை கோயம்பேட்டில் இருந்து நந்தனத்தில் உள்ள சி.ஐ.டி. நகருக்கு மாற்றப்பட்டுள்ளது

------------

*விளையாட்டுச் செய்திகள்*

இங்கிலாந்து அணிக்கு எதிரான 4வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாளான நேற்று ஆட்டநேர இறுதியில் இந்தியா தமது முதல் இன்னிங்சில் 4 விக்கெட் இழப்புக்கு 264 ரன் எடுத்தது.

மான்செஸ்டரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் சாய் சுதர்ஷன் 61 ரன்னுக்கும், ஜெய்ஸ்வால் 58 ரன்னுக்கும் ஆட்டமிழந்தனர்.

ஷர்துல் தாக்கூர், ரவீந்திர ஜடேஜா ஆகியோர் தலா 19 ரன்னுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர்.

இங்கிலாந்து பந்துவீச்சாளர்கள் பென் ஸ்டோக்ஸ் 2 விக்கெட்டையும், க்ரிஸ் ஓக்ஸ், லியாம் டாசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தியுள்ளனர்.

--------------

ஃபிடே மகளிர் உலகக் கோப்பை செஸ் போட்டியில் இந்தியாவின் திவ்யா தேஷ்முக் இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஜார்ஜியாவின் பதுமி நகரில் நடைபெற்று வரும் இப்போட்டியின் அரையிறுதிச் சுற்றின் 2வது ஆட்டத்தில் அவர், சீனாவின் **Tan Zhongvi**-ஐ வென்றார்.

இந்த வெற்றியின் மூலம் ஃபிடே மகளிர் உலகக் கோப்பை செஸ் போட்டியின் இறுதிச்சுற்றுக்கு முன்னேறிய முதல் இந்தியர் என்ற பெருமையை திவ்யா தேஷ்முக் பெற்றுள்ளார்.

------------

ஆசிய ஜூனியர் பேட்மிண்டன் போட்டியின் இந்தியாவின் தன்வீ ஷர்மா மூன்றாம் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இந்தோனேஷியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில் அவர், 21-6, 21-6 என்ற செட் கணக்கிகல் ஐக்கிய அரபு எமிரேட்டின் வைதேகி காளிதாசனை வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Ansh Negi, Pranav Ram Nagalingam** ஆகியோரும் மூன்றாம் சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் விஷ்ணு கேதர் கோடே – கீர்த்தி மன்சலா இணை 3வது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

**<<<<The End>>>>**